மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.125/2021

வாக்குமூலம்: வா.சா.1 தங்கராஜ்

14.12.2023: சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை:– தாவாச்சொத்தின் சர்வே எண்.59/4 ஆகும். தாவாச்சொத்தின் சர்வே எண்.60/5ஏ என்று எதுவும் சொல்லவில்லை என்றால் அது என்னுடைய சொத்து அல்ல. சர்வே எண்.59/4ல் பாதை இருப்பதாக பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.59/4 நிலத்தில் பிரதிவாதிகளுக்கு பாதை உரிமை ஏதும் இல்லை என்றுதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.59/4–ன் வடக்கு பக்கம் கிழமேலாக நான் வேலி அமைத்ததை பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் என்னுடைய நிலத்தில்தான் வேலி அமைத்தேன். தாவா நிலத்திற்கு மேற்குப்புறம் பிரதிவாதிகளின் நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா நிலத்திற்கு மேற்கு கலிக்கநாயக்கன்பட்டி கிராமமும், கிழக்கு பக்கம் டி.கே.என்.புதூரும் உள்ளதா என்றால் குளம் தாண்டி ஊர் உள்ளது. குளம் தாண்டி உள்ளது எந்த கிராமம் என்றால் கலிக்கநாயக்கன்பட்டி கிராமம்தான் குளம் தாண்டி உள்ளது. கலிக்கநாயக்கன்பட்டிக்கு போகும் கிழமேல் பாதை என்னுடைய தாவா நிலத்திற்கு மேற்குப்பக்கமாக உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய தாவா சொத்துக்கு மாமூல் பாதை உள்ளது என்றால் உள்ளது. நான் டி.கே.என்.புதூரில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா நிலத்திற்கு கிழக்குப்பக்கம் டி.கே.என்.புதூரிலிருந்து மாமூல் பாதை வழியாகத்தான் நான் வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா நிலங்களுக்கு மேற்குப்பக்கம் கலிக்கநாயக்கன்பட்டி கிராமத்திற்கு கிழமேல் பாதைக்கு மாமூல் பாதை வழியாகத்தான் சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்தின் மேற்கு பக்கமாகவும், கிழக்கு பக்கமாகவும் மாமூல் பாதை உள்ளது என்றால் இல்லை. இரண்டு பக்கமும் மாமூல் பாதை உள்ளது என்றும், அதன் வழியாகத்தான் நான் என்னுடைய தாவா நிலங்களுக்கு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. நான் 2009ல் தாவா நிலத்தை கிரையம் பெற்றேன். கதிரேசன் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். அந்த கிரைய சொத்து விபரம் எனக்கு தெரியும். அந்த கிரைய ஆவண சொத்து விபரத்தில் சர்வே எண்.60/5ஏ நிலத்தையும் சேர்த்துத்தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் மேற்படி புஞ்சை நிலத்திற்கு ஏற்பட்ட சகல மாமூல் வழிநடை

அனுபவ பாத்தியங்கள் யாவும் சேர்ந்து என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆம். என்னுடைய நிலத்திற்கு மேற்குப்பக்கம்தான் கிருஷ்ணசாமி மற்றும் வேலுச்சாமி கவுண்டர் நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படியார்கள் நிலங்கள் வழியாகத்தான் என்னுடைய நிலத்திற்கு மாமூல் பாதை உள்ளது என்றால் சரிதான். கதிரேசனுக்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் தாய் வழியான தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியம். அதிலும் சொத்து விபரத்தில் கிருஷ்ணசாமி மற்றும் வேலுச்சாமி கவுண்டர் நிலத்தில் பொதுவாக நடந்து கொள்ளவேண்டிய நடைபாதை பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேலுச்சாமி கவுண்டருக்கு பதிலாக தற்போது சின்னப்பழனிச்சாமி கவுண்டர் நிலம் உள்ளது. கதிரேசனின் தாயார் கிரையம் செய்த வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் மேற்குப்பக்கம் வேலுச்சாமி கவுண்டர் மற்றும் கிருஷ்ணசாமி கவுண்டர் ஆகியோர்கள் புஞ்சை நிலங்கள் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் மாமூல் நடைபாதையானது கிருஷ்ணசாமி கவுண்டர், வேலுச்சாமி கவுண்டர் நிலத்தில் பொதுவாக நடந்து கொள்ளவேண்டிய மாமூல் நடைபாதை பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மாமூல் பாதை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நீண்ட நெடுங்காலமாக போகக்கூடியது என்றால் சரியல்ல. அந்த மாமூல் பாதை டீடெய்ல் பாதை என வருவாய்த்துறை ஆவணங்களில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை விட்டுவிட்டுத்தான் நான் வேலி போட்டுள்ளேன். அந்த பகுதியில் உள்ள விவசாயிகளின் காவல் தெய்வமாக இலந்தமர கருப்பசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு மாமூல் பாதை வழியாகத்தான் திருவிழா காலங்களில் பக்தர்கள் சென்று வருவார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் வேலிக்காக நான் போட்ட குழாய்கள் என்றால் சரிதான். அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு போடுவதற்கு முன்பாக என் மீதும் என் மகன் சரவணன் மீதும் முருகசாமி போலிசில் புகார் கொடுத்து வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அது பொய் வழக்கு. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வருவாய்த்துறையினர் மற்றும் அனைவரும் என்னுடைய நிலத்திற்கு வந்தார்கள். டீடெய்ல் பாதையை மறித்து வேலி போடக்கூடாது என்று சொன்னார்களா என்றால் சொன்னார்கள். நான் அதை விட்டுவிட்டேன். வழக்கு போடுவதற்கு முன்பாக தாவா சொத்துக்கு வடக்குப்பக்கமாக நான் வேலி போடவில்லை என்றால் சரியல்ல. நான் அதற்கு முன்பாகவே வேலி போட்டுவிட்டேன். வழக்கு போட்டபின்புதான் இரும்பு குழாய்கள் பதித்தேன்

என்றால் சரியல்ல. அதுவும் முன்பே பதித்துவிட்டேன். நான் தாவா நிலத்தின் வடக்கு பக்கம் கிழமேலாக செல்லும் மாமூல் பாதையான டீடெய்ல் பாதையை மறித்து வேலி போட்டால் தாவா நிலத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் உள்ள பிரதிவாதிகள் மற்றும் அனைவரும் மாமூல் பாதையை பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல. அந்த மாமூல் பாதை சுமார் 8 அடி அகலம் என்றாலும், என்னுடைய சர்வே எண்.59/4 நிலத்தின் வடக்கு பக்கம் கிழமேலாக 350 அடி நீளம் கொண்டது என்றாலும் சரியல்ல. தாவா பாதையை அழித்துத்தான் நான் வேலி போட முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. 8 அடி பாதையும் இல்லை. நான் அதை அழிக்கவும் இல்லை. தாவா நிலத்திற்கு மேற்கு மற்றும் கிழக்குப்பக்கமாக உள்ள மாமூல் பாதையின் தொடர்ச்சியாக உள்ளடீடெய்ல் பாதையை நான் என் நிலத்திற்கு போய் வர பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆவணங்களிலேயே தாவா டீடெய்ல் பாதையைத்தான் மாமூல் பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா நிலத்தில் உள்ள டீடெய்ல் பாதையை மறித்து வேலி போட எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் நான் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. தாவா பொதுப்பாதையை மறிக்கக்கூடாது என்றுதான் அரசு அதிகாரிகளும், பிரதிவாதிகளும், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆட்சேபித்தார்கள் என்றால் சரியல்ல. பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்யவேண்டுமென்றுதான் இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யவேண்டி நான் மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பொதுப்பாதையை மறித்து என்னால் போடப்பட்டுள்ள இரும்பு குழாயை அகற்ற நான் கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும், பிரதிவாதிகள் தரப்பு எதிர்கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2023.12.14 12:16:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.